# 1.1 கடவுள் சாயலில் மானிடர்





கடவுள் தமது உருவில் மானிடரைப் படைத்தார். கடவுளுடைய உருவிலேயே அவர்களைப் படைத்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்.
(தொடக்க நூல் 1:27)

அனைத்துப் படைப்புகளிலும் மேன்மையானது மானிடப் படைப்பாகும். இச்செய்தி உங்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதாய் உள்ளதா? அப்படியாயின் இயற்கை உட்பட அனைத்துப் படைப்புகளையும் வழி நடத்தும் பொறுப்பு உங்களுடையதல்லவா?



கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன.
(தொடக்க நூல் 1:31)

நீங்கள் ஒரு குழந்தையாய் பிறந்தபோது உங்கள் பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள் அல்லவா? அவ்வண்ணமே கடவுள் தாமும் தனது படைப்பின் அழகைக் கண்டு மகிழ்ந்திருப்பார். எனவே கடவுளின் படைப்பின் அழகு, ஒழுங்கு ஆகியவற்றைக் காத்துக் கொள்ளும் பொறுப்பு உங்களைச் சார்ந்ததாகும். இது பெருமைப்படக்கூடிய ஓர் பொறுப்பு அல்லவா?



*இலவச விநியோகத்திற்காக*

கடவுளே முழு உலகையும் படைத்தவர்; அவர் அனைத்து ஆற்றலையும் கொண்டவர் என்பதை ஏற்றுக் கொள்ளுகிறீர்களா? மக்கள், கடவுள் தொடர்பான தங்கள் அனுபவத்தையும்(பட்டறிவையும்), ‘‘அவரே உலகைப் படைத்த படைப்பாளர்’’ என்பதையும் திருவிவிலியத்தில் எழுதி வைத்தனர்.



வானமும் உமதே! வையமும் உமதே!
பூவுலகையும் அதில் நிறைந்துள்ள
அனைத்தையும் நிலை நிறுத்தியவர் நீரே!
(திருப்பாடல் 89:11)

மேற்காணும் வசனம் மக்களின் இறைப்பற்றை வெளிப்படுத்துகிறது. அவரின் படைப்பின் மேன்மை மனுக்குலம் ஆகும். மனுக்குலம் கடவுளின் சாயலைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவர் மனுக்குலத்தை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். எனவே கடவுளின் சாயல் என்பது அவரின் ‘உருவ ஒற்றுமை’ எனப் பொருள்படாமல், ‘குணவியல்பு அல்லது தன்மை’ என்றே பொருள்படும். அவரின் படைப்பாகிய நாம் ஏனைய படைப்புகளைக் காத்து வழி நடத்துவதன் மூலம் அவரின் திருப்பெயருக்கு மாண்பு சேர்க்க முயல்வோம். இதுவே கடவுளின் விருப்பமாகும்.

மனுக்குலம், தான் வாழ்வதற்குப் பேருதவியாய் அமைந்துள்ள இயற்கையைப் பேணிக் காத்தல் வேண்டும். இயற்கையை அழிக்கும் மனுக்குலம் காலப் போக்கில் தாமாகவே அழிந்துவிட நேரிடும்.

ஓர் வீடு கட்டுவதற்கு முன் அதற்கான அடித்தளம் அமைக்கப்படல் வேண்டுமல்லவா? அதுபோன்றே ஒவ்வொரு குடும்பமும் கடவுளை அடித்தளமாகக் கொண்டு வாழ முன் வருதல் வேண்டும். ஓர் வீட்டிற்கான அடித்தளத்தை அமைக்க முயலும் பொழுது, தமது திரு அவையின் ஆயரை அல்லது போதகரை அழைப்பது வழக்கமல்லவா? ஆயர் நம்முடன் இணைந்து ஓர் துதிப்பாடல் பாடி, திருப்பாடல் 127 அல்லது அதற்கிணையான திருவிவிலியப் பகுதியொன்றை வாசித்து, மன்றாடி, வீடு கட்டும் பணியை ஆரம்பித்து வைப்பது உங்கள் நினைவில் தோன்றுகிறதல்லவா?


*இலவச விநியோகத்திற்காக*



ஆண்டவரே வீட்டைக் கட்டவில்லையெனில்
அதைக் கட்டுவோரின் உழைப்பு வீணாகும்;
(திருப்பாடல் 127:1)

வீட்டைக் கட்டி முடித்த பின் மீண்டும் ஒரு முறை ஆயரை அழைத்து, கடவுளுக்கு நன்றி கூறி மன்றாடியதன் பின்பு மனை புகுதல் வழக்கமல்லவா? இதன் நோக்கம் வீட்டைக் கட்டும்பொழுது தடையேதும் ஏற்படா வண்ணம் காப்பது போன்று, கடவுள் ஒவ்வொரு குடும்பத்தையும் காக்கிறார் எனும் நம்பிக்கையேயாகும்.

அன்று தொடக்கம் இன்று வரை மக்கள் தங்கள் வாழ்வின் அனைத்து நடைமுறைகளிலும் கடவுளை முன்னிலைப்படுத்தி யாவற்றையும் செய்து வருவதைக் காணலாம். படைப்புகளின் உரிமையாளராகிய கடவுளை நமது வாழ்விலும், வரலாற்றிலும் பங்கேற்கச் செய்யும் முன்முயற்சியாகவே இவ்விதம் மக்கள் கடவுளை முன்னிலைப்படுத்தி வருகின்றனர்.

எனவே நீங்களும் உங்கள் கல்வியிலும் வாழ்விலும் முன்னேற கடவுளை முதன்மையாகக் கொள்ளுதல் மிகவும் தேவையானதென்பதை உணருகிறீர்களா? கடவுள் பகுத்தறிவையும் கல்வித் திறமைகளையும் மனிதருக்கே தந்துள்ளார்.

உங்கள் கல்விக்குத் தடையாக அமையக் கூடியவை எவையெனக் குறிப்பிடும் ஓர் பட்டியலை உங்களால் தயாரிக்க முடியுமா?

**எடுத்துக்காட்டு**

1. குடும்பத்தின் வறுமைச் சூழல்.
2. ..................................................
3. ..................................................
4. ..................................................
5. ..................................................

மேற்காணும் சூழலில் வெற்றி காண நீர் எடுக்கக் கூடிய சில நடவடிக்கைகளை கீழே அட்டவணைப்படுத்துக.

**எடுத்துக்காட்டு**

1.. வீட்டுத் தோட்டம் அமைத்தல்.

2..................................................

3..................................................


4..................................................

5...................................................

திருவிவிலியத்தில் இஸ்ரயேல் மக்களின் வாழ்வு ஆபிரகாமை முதன்மையாகக் கொண்டு ஆரம்பிக்கின்றது. (தொடக்க நூல் அதிகாரம் 12) அப்படியாயின் தொடக்க நூலின் முதல் 11 அதிகாரங்களை எப்படி அணுகுவது?

இப்பகுதியை வரலாற்றுக்கு முற்பட்ட பகுதியென விவிலிய அறிஞர்கள் கூறுகின்றனர். எனவே இப்பகுதியில் வரும் ஒவ்வொரு நிகழ்விலும் மறைந்திருக்கும் பேருண்மைகள் எவையெனக் காண முயலுதல் மிகவும் தேவையான ஒன்றாகும்.

**பாபேல் கோபுரம் குறித்த செய்தியை வாசிக்கவும். (தொட. 11: 1-9).**



கி.மு. 587 இல் இஸ்ரயேல் மக்கள் பாபிலோனின் படையெடுப்பின் விளைவாய் அந்நாட்டிற்குச் சிறைப்பட்டுப் போயினர். இஸ்ரயேலின் இளைஞர், கைத்திறன் படைத்த கலைஞர் மற்றும் அறிஞர் பெருமக்களும் சிறைப்பட்டுப் போயினர். இஸ்ரயேல் நாட்டில் எஞ்சியவர் முதியோரும் சிறுவரும் நோயுற்றோருமேயாவர்.

சிறைப்பட்டுப்போன இஸ்ரயேல் மக்கள் பாபிலோனியரின் இறைப்பற்றின் முறைகளைக் கண்டு வியப்புற்றனர். அவர்களின் இறைப்பற்று தம்மிலிருந்து மிகவும் வேறுபட்டதாய் இருந்ததைக் கண்டனர். அவர்கள் வானுயர்ந்த கட்டிடங்களை அமைத்திருந்தனர். அவ்வுயர்க் கட்டிடங்கள் அவர்களின் செல்வச் செழிப்பை எடுத்துக் காண்பித்தன. வாழ்வில் மிதமிஞ்சிய அளவு செல்வம் குவியும் பொழுது, கடவுளை மறந்து விடும் போக்கு தலையெடுக்கும் என்பதை பாபிலோனியரின் வாழ்வு மூலம் இஸ்ரயேலர் உணரத் தலைப்பட்டனர். செல்வமிருப்பின் மண்ணை ஆளலாம், அந்த விண்ணையும் அடையலாம் என்பதன் அடையாளமே விண்முட்டும் பாபிலோன் கோபுரங்கள். இவ்விதமான சூழலிலேயே சிறைப்பட்டுப்போன இஸ்ரயேல் மக்கள் பன்னெடுங் காலமாய்த் தாங்கள் கொண்டிருந்த இறை நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டனர்.

ஆண்டவராகிய கடவுள் முழு உலகையும் படைத்தவர்; நாம் வாழும் உலகம், அதிலுள்ள படைப்புகள், அத்துடன் நாமும் அவரின் கைகளுக்கு உள்ளடங்கிய படைப்புகளே எனும் பேருண்மையை எடுத்தியம்பவே பாபிலோன் கோபுர நிகழ்வு எழுதப்பட்டுள்ளது. எனவே நம்மைப் படைத்த படைப்பாளரை ஒதுக்கி வைத்துவிட்டுச் செயல்பட முனையும் பட்சத்தில், நாமே நமது அழிவிற்குக் காரணராய் அமைந்து விடுவோம் என்னும் உண்மை தெள்ளத் தெளிவாய் ''பாபிலோன் கோபுரத்தின் சரிவு'' எனும் நிகழ்வு மூலம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

நமது சமூக வாழ்வில் தனித்து எடுக்கும் முடிவு மற்றும் இறுமாப்பு காரணமாய் கடவுளுக்கு வழங்க வேண்டிய மதிப்பு மற்றும் மாண்பை மறந்து விடுவதுண்டு. கடவுளுக்கேயுரிய மாண்பை தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும் முயற்சிகளும் இல்லாமலில்லை. சமூக வாழ்வு என்பது ஓர் கூட்டுப் பொறுப்பாகும். கடவுள் நம்மை விடுத்து தனியே முடிவெடுக்க விரும்புவதில்லை. எனவேதான் மண்ணைப் பண்படுத்தும் மற்றும் பாதுகாக்கும் பொறுப்பை தமது படைப்பாகிய மானிடரிடமே ஒப்படைத்தார். கடவுள் இவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டிருக்கும் பொழுது, மானிடர் தமது கூட்டுப் பொறுப்பிலிருந்து விலகி, தமது உடன் மக்களையும், படைப்பாளராகிய கடவுளையும் விட்டு விலகிச் செயல்பட முனைவது சிறந்த முன்னுதாரணமாகாது.

கடவுளின் படைப்பின் மணிமுடியெனத் திகழும் மானிடர், கடவுளை முன்னிலைப்படுத்தி, ஏனைய படைப்புகளின் வளர்ச்சிக்காக உழைக்க முன் வருதல் வேண்டும். இதுவே கடவுள் நம்மிடம் எதிர்பார்க்கும் பொறுப்பாகும். இல்லையேல் படைப்பின் நன்மைக்கு எதிராய்ச் செயல்படுவோர் எனும் இழி நிலைக்கு நாம் ஆளாவோம்.

மானிடர் தமது சொந்த முயற்சியால் எடுக்கும் தீர்மானம் மற்றும் நடவடிக்கைகளின் விளைவுகளை அட்டவணைப்படுத்துக.

1. ..........................................................................................................
2. ..........................................................................................................
3. ..........................................................................................................
4. ..........................................................................................................
5. ..........................................................................................................

கடவுள் தமது படைப்பு அனைத்தின் மீதும் சமமான அன்பைச் செலுத்துகிறார். கடவுள் ஆபிரகாம் மீது அன்பு கூர்ந்தார். அவரின் சந்ததியினர் ''கடவுள் தங்களைத் தேர்ந்தெடுத்தார்'' என நம்பினர்.

இம்மக்கள் எகிப்தில் அடிமைத்தனத்தில் சிக்குண்டு தவித்தபோது கடவுள் அவர்களை மீட்ட நிகழ்ச்சி இறைப்பற்று கலந்த வரலாற்று நிகழ்வாகும். இதன் அடையாளமாக விடுதலைப் பயணத்தின் பொழுது, சீனாய் மலையில் மோசே ஊடாக நீதிச்சட்டத்தையும் கட்டளைகளையும் பெற்றுக் கொண்டனர். இவையனைத்தும் பிற்காலத்தில் இஸ்ரயேலர் கர்வம் நிறைந்த மக்களாய் வாழவும் பிற மக்களை நடுத்தீர்க்கத் துணிந்தோராய் மாறவும் வழி வகுத்தன. இவ்வணுகு முறையின் விளைவாகவே '' யூதர் மற்றும் யூதர் அல்லாதோர் '' எனும் பிரிவினை பிற்காலத்தில் மிகப் பெரும் சிக்கலாய்த் தோன்றியது எனலாம்.

கடவுளின் படைப்பாகிய மாந்தர் ஒருவரிலொருவர் அன்பு செலுத்தி வாழ்தல் வேண்டுமெனக் கடவுள் விரும்புகிறார். நாம் மாத்திரமே கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டோர், அவரின் பேரருளுக்குரியோர் எனும் இறுமாப்பு, மிகுந்த அன்பு குறைவுக்கு நம்மை இட்டுச் செல்லும். ஆண்டவர் வாழ்ந்த முதலாம் நூற்றாண்டில் பலஸ்தீனாவில் நிலவிய சமூக ஏற்றத்தாழ்வை பவுலடிகளாரின் திருமடல்கள் மூலம் சிறப்பாக அறியலாம்.



*இலவச விநியோகத்திற்காக*



இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை; ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை; கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாக இருக்கிறீர்கள் (கலா. 3:28).

**பயிற்சி**

கலாத்தியர் 5:19-26 அடிப்படையாகக் கொண்டு கடவுளின் படைப்புடன் இணைந்து வாழ்வதற்குச் சார்பானவை, எதிரானவை யாதென இனங் கண்டு இருவேறு பட்டியலைத் தயாரிக்கவும்.

| சார்பானவை | எதிரானவை |
|---|---|
| 1. ............................................... | 1. ............................................... |
| 2. ............................................... | 2. ............................................... |
| 3. ............................................... | 3. ............................................... |
| 4. ............................................... | 4. ............................................... |
| 5. ............................................... | 5. ............................................... |

## செயல்பாடு

1. சிறையிருப்பில் வாழ்ந்த இஸ்ரயேலர் கடவுள் குறித்து உணர்ந்து கொண்டவை எவை?

2 பாபேல் கோபுரம் நிகழ்ச்சியை ஒத்த ஓர் கதையை குழுவாக இணைந்து எழுதவும்.

3 ஓர் வீடு கட்டத் தொடங்கும்பொழுது, ஆயர் ஏறெடுக்கும் மன்றாடலைச் சுருக்கமாக எழுதவும்.

4 வீடு கட்டி நிறைவு செய்த பின்பு வாசிக்கக் கூடிய பொருத்தமான சில திருவிவிலியப் பாடங்களைப் பரிந்துரைக்கவும்.



இலவச விநியோகத்திற்காக